மேற்கொண்டாலும், அந்தக் கிடங்கில் சேமித்து வைத்துள்ள மூலப் பொருள்களின் எரியும் தன்மையினால் தீயானது மீண்டும் பரவத் தொடங்கி, தொடர்ந்து எரிந்து வருகின்றது. தற்பொழுது லாரியின்மூலம் மணல் கொண்டு வந்து கொட்டப்பட்டு, தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தகவல் கோரினீர்கள், அதற்கு இரண்டு அமைச்சர்கள் உங்களுக்கு திருப்தியாகப் பதில் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள்.

(ஆ) திருக்கோவிலூர் தொகுதி, சின்னசெவலை, செங்கல்வராயன் சர்க்கரை ஆலை, கரும்பு அரவை தொடங்குதல், விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முற்பகல் 11-25

***முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் தொகுதி, சின்னசெவலையில் உள்ள செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் power turmoil ஏற்பட்டு, 2014 ஆம் ஆண்டிலிருந்து இயங்காமல் இருக்கிறது. மேலும், அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு ஜனவரி முதல் டன்னுக்கு 2,000 ரூபாயும், பிப்ரவரி முதல் டன்னுக்கு வெறும் 900 ரூபாயும் மட்டுமே கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கான நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டும் என்று பல முறை இதே அவையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கடிதம் எழுதியிருக்கிறேன், எழுதியிருக்கிறேன் என்று சொன்னாரே தவிர, இதுவரை நிலுவைத் தொகை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்கப்படவில்லை. சின்னசெவலையில் உள்ள அந்த ஆலை மூடப்படுகின்ற நிலையில் உள்ளது. அந்த ஆலை அங்கு இயங்கவே இல்லை. ஆகவே, உடனடியாக Expert Committee-ஐ அங்கு அனுப்பி, சின்னசெவலையில் உள்ள அந்த ஆலை இயங்குவதற்கான வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

2017 ஜனவரி 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 30-1-2017 அன்று காலை 5-00 மணிக்கு கொதிகலன் சூடேற்றப்பட்டு, இரவு 8-25 மணிக்கு மின் உற்பத்தி தொடங்கப்பட்டு, அன்று இரவு முழுவதும் செயல்பட்டு 6.05 மெகா வாட் அளவிற்குத்தான் மின் உற்பத்தி செய்யப்பட்டது. இன்றைக்கு முழு அளவில் செயல்பட்டு 10 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படும். அடுத்த மாதம் 1 மற்றும் 2 ஆகிய நாட்களில் 12 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்படும். 12 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி உயர்ந்தவுடன் உடனடியாக கரும்பு அரவை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், கூட்டுறவுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.150.74 கோடி நிதியை வழிவகைக் கடனாகக் கேட்டுள்ளோம். அத்தொகை கிடைக்கப்பெற்றவுடன், உடனடியாக விவசாயிகளுக்கான நிலுவைத் தொகை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு)*

(இ) எண்ணூர் காமராசர் துறைமுகம், கப்பலிலிருந்து கசிந்த எண்ணெய் கடலில் கலந்ததால் ஏற்பட்ட பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சாமி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28-1-2017 அன்று விடியற்காலையில் எண்ணூர் காமராசர் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற கப்பல், வழியிலேயே, துறைமுக நுழைவாயிலுக்கு அருகிலேயே வேறு ஒரு கப்பலுடன் மோதியதில் இரண்டு கப்பல்களிலிருந்தும் எண்ணெய் கசிந்து வெளியாகியதால் 28 ஆம் தேதியிலிருந்து இன்றுவரை அங்குள்ள கடல் பகுதியே எண்ணெய்யாக மாறி, கடற்கரையோரங்களில். . .*